**05.04.2023**

**அ.வ.எண். 232/2012**

**பி.சா.1 தனலட்சுமி அவர்களின் குறுக்கு விசாரணை**

1. எனக்கு தற்போது 69 வயது ஆகின்றது. நான் நெல்வாய் கிராமத்தில் பிறந்தேன். ராமதாஸ் என்பவருக்கு கிணறு வெட்டுவது குலதொழில் என்றால் அவர் கிணறு வெட்டுவார், கசாப் கடை வைத்துள்ளார். ராமதாஸின் பூர்வீகம் நாமக்கல் மாவட்டம், நல்லப்பநாயக்கன்பட்டி கிராமம் என்றால் சரியல்ல. ராமதாஸின் பூர்வீகம் பெணாங்கு என்ற இடத்திலிருந்து வந்து இங்கு வசித்து வருகிறார்.

2. பெணாங்கிலிருந்து எந்த வருடம் ராமதாஸ் இந்தியாவிற்கு வந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவர் முதன்முதலில் தமிழ்நாட்டில் எந்த ஊருக்கு வந்தார் என்றால் எனக்கு தெரிந்தவரை அவர் நெல்வாய் கிராமத்திற்கு வந்தார். நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கும் வாதியை எனக்கு தெரியாது. வாதியை எனக்கு எப்போது தெரியும் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்த பிறகு தான் தெரியும்.

3. வாதி நெல்வாய் கிராமத்தில் வசித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. ராமதாஸ் என்பவர் தாவா சொத்தினை கிரையம் வாங்குவதற்கு

முன்பு வளையான்புரம், காட்டுக்கொள்ளை என்ற கிராமத்தில் சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. ராமதாஸ் தாவா சொத்தினை எப்போது கிரையம் வாங்கினார் என்றால் சுமார் 50 வருடத்திற்கு முன்பு கிரையம் வாங்கினார். உத்திரமேரூர் தாலுக்காவில் உள்ள பாளேஸ்வரம் என்ற கிராமம் குறித்து எனக்கு தெரியாது.

4. தாவா சொத்தினை கிரையம் வாங்குவதற்கு முன்பு ராமதாஸ் நெல்வாய் கிராமத்தில் குடியிருந்தார். எனக்கு தமிழ் படிக்க தெரியாது. நெல்வாய் கிராமத்தில் சொத்தினை கிரையம் வாங்குவதற்கு முன்பு ராமதாஸ் பாளேஸ்வரம் கிராமத்தில் குடியிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 அடிப்படையில் கிரையம் வாங்கப்பட்ட சொத்து ஒரே ஆவணத்தின் அடிப்படையில் தான் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பதிவு செய்யப்படும் போது அன்றைய தேதியில் ரொக்கமாக ரூபாய் 4 ஆயிரம் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. பெரும்கோழி கிராமத்திலுள்ள சொத்துக்களை ராமதாஸ் 1966ம் வருடம் கிரையம் வாங்கினார். வாதி என்னைவிட வயதில் பெரியவரா, சிறியவரா என்றால் அவர் யார் என்று எனக்கு தெரியாது. வாதியுடன் பிறந்தவர்கள் பற்றி எனக்கு

தெரியாது. நெல்வாய் கிராமத்தில் சந்தைமேட்டு தெருவில் நான் குடியிருந்து வருகிறேன். வாதி நெல்வாய் கிராமத்தில் எந்த தெருவில் வசித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு எந்த விலாசத்தில் குடியிருக்கும் நபர் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். மனோகர் வீட்டுக்கு பக்கத்து வீட்டில் உள்ளவர் என் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்று தெரிந்துக்கொண்டேன். மனோகர் எந்த தெருவில் வசித்து வருகிறார் என்று எனக்கு தெரியாது.

(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).